அசல் வழக்கு எண்: 364/2022

DEPOSITION OF WITNESS: D.W.1

| | |
|---|---|
| பெயர் | மூர்த்தி (எ) பஞ்சம் |
| தந்தை பெயர் | சின்னக்குழந்தை |
| வயது | 36 |
| கிராமம் | ஈயகொளத்தூர் |
| வட்டம் | போளூர் |
| தொழில் | கூலி வேலை |

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 27th day of November 2025

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி ஆவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்திற்கு நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். ஆவணங்கள் ஏதும் இல்லை. பிராதை தள்ளுபடி செய்ய பிரார்த்திக்கிறேன்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –</u>

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். எனது நிரூபண வாக்குமூலத்தில் 3ம் பத்தியில் வாதி பிராதில் சொல்லியுள்ள விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். அதற்கு மறுப்பு எதுவும் குறிப்பிட்டுள்ளேனா என்றால் மறுக்கிறேன். உண்மையில் நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் வாதியின் வழக்கை மறுத்து எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 அடமான பத்திரத்தில் உள்ளது என்னுடைய கையெழுத்து என்றால் சரிதான். நான் தான் சார்பதிவாளர் அலுவலகம் சென்று கையெழுத்து செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 கடன் பத்திரத்தில் 1வதாக சாட்சி கையெழுத்து செய்துள்ள பாபு என்பவர் எங்கள் ஊர்காரர். நான் சீட்டு நடத்துவதற்கு உரிமம் எதுவும் பெற்றுள்ளேனா என்றால் இல்லை. பயிர் சீட்டு தான் நடத்துகிறேன். பொதுவாக என்னிடம் யார் சீட்டு கட்டுகிறார்களோ அவர்களுக்கு தான் பணம் கொடுப்பேன் என்றால் சரிதான். நான் அஸ்கர் அலி என்பவர் சீட்டு பாக்கி பணம் தருவதற்காக என்னை மிரட்டி அடமான பத்திரம் பதிவு செய்தது சம்மந்தமாக நான் காவல் துறை புகார் எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை.

அவ்வாறு புகார் கொடுத்ததற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வாதியிடம் பெற்ற கடன் தொகையை அசலுடும் வட்டியும் சேர்த்து பைசல் செய்துவிட்டதாக சொல்லும் நிலையில் அதை நிரூபிப்பதற்கு ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய சொத்து பத்திரம் வாதியிடம் நான் தான் கொடுத்தேன் என்றால் இல்லை. அது எப்படி வாதி கையில் சென்றது என்று எனக்கு தெரியாது. வாதி எனது சொத்து பத்திரத்தை எடுத்து சென்றதாக எனது எதிர்வழக்குரையிலும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் எனது சொத்து பத்திரத்தை வீட்டில் பீரோவில் தான் வைத்திருந்தேன். உண்மையில் எனது சொத்து பத்திரத்தை நான் தான் வாதியிடம் அடமான கடன் போடும் போது கொடுத்தேன் என்றால் சரியல்ல. உண்மையில் எனது சொத்து பத்திரம் வாதி எடுத்திருந்தால் அது குறித்து நான் நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும் அவ்வாறு எதுவும் எடுக்காததால் வாதி சொத்து பத்திரத்தை எடுத்துக்கொண்டதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வாதியிடம் நான் ரூ.3,00,000/- கடன் வாங்கினேன் என்றால் சரிதான். ஆனால் அதை திருப்பி கொடுத்துவிட்டேன். உண்மையில் நான் வாதியிடம் வாங்கிய கடன் தொகை மற்றும் வட்டி எதையும் திருப்பி கொடுக்கவில்லை என்றும் அவ்வாறு கொடுத்திருந்தால் அடமான கடன் பத்திரத்தை ரத்து செய்திருப்போம் என்றால் நான் தான் அஸ்கர் அலி கொடுக்க வேண்டிய தொகைக்காக இந்த அடமான கடன் பத்திரத்தை ரத்து செய்யாமல் வைத்துக்கொள்ளுமாறு தெரிவித்தேன். வாதி கடனை இன்று வரை நான் திருப்பி கொடுக்கவில்லை என்றும் அதனால் இந்த வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/- S. Senthilbabu,<br>சார்பு நீதிபதி,<br>போளூர். |